ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்கள் அடிப்படையிலும் சரி, சப்கலெக்டர் விசாரணை அறிக்கை வந்த பிறகு அதன்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. சப்கலெக்டர் தீவிரமாக விசாரிக்க முன்வந்திருக்கிறார்கள். மறைத்தில உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தும அவர்கள் நினைவிற்கு வரும். அறிக்கை வந்த பிறகு அதன் மீது அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும. எனவே அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி மேலும் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது,

மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க முதல் கவன ஈர்ப்பு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

## 4. கவன ஈர்ப்பு.

அரசு கஸ்தூர்பாகாந்தி மருத்துவமனையில் பெனிசிலின் ஊசி போட்டதால் ஏற்பட்ட மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ( ) திருவாளர்கள் எஸ். இராசாராமன், பாபு ஜனார்த்தனன், ரா. கிருஷ்ணன், டி. மணி, ந. பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. பொன்னுரங்கம், மு. அரங்கநாதன், அ. செல்வராசன், என். எஸ். வி. சித்தன். அ. ரகுமான்கான், வி. பி. பாலசுப்பிரமணியன், ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன், எஸ். என். இராமசாமி, ட. தீர்த்தராமன், ப. வெங்கட்டசுப்பிரமணியம், பெ. சு. திருவேங்கடம், இரா. தாமரைக்கனி ஆகியோர் கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

''சென்னை கஸ்தூர்பா காந்தி அரசு மருத்துவமனையில் 22-4-1981 அன்று பெனிசிலின் ஊசி போட்டதால் ஒரு மாணவி இறந்தது குறித்து''

[1981 மே 11

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சென்னை கஸ்தூர்பா காந்தி அரசு மருத்துவமனையில் 22-4-1981 அன்று பெனிசிலின் ஊசி போட்டதால் ஒரு மாணவி இறந்தது குறித்து"

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திரு. சுந்தரேசன் என்பவரின் மகளும், என். கே. டி. மகளிர் உயர்நிலைப் பள்ளியின் மாணவியுமான 14 வயது சாந்தி சென்னை கஸ்தூரிபா காந்தி மருத்துவ மனையிலுள்ள பள்ளி சுகாதார வெளியிருப்பு நோயாளி பகுதிக்கு 15.4.81 அன்று காலை 9.30 மணிக்கு சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு வலது கண்ணில் ஏற்பட்ட கட்டிக்காக ஸ்ட்ரெப்டோமைசினும், ப்ரொக்கெய்ன் பெனிசிலினும் போடும்படி பள்ளி மாணவர்கள் சிகிச்சைப் பிரிவிற்கான மருத்துவ அதிகாரியால் பணிக்கப்பட்டது. மேற்படி ஊசி மருந்து செவிலியரால் போடப்பட்டது. ஊசி போட்ட ஐந்து நிமிடங்களில் நோயாளி வாந்தி எடுத்துதுடன் மயக்க முற்றார். பாயில்ஸ் கருவியின் மூலம் செயற்கை முறையில் சுவாசிக்க வைக்கும் முறை மேற்கொள்ளப்பட்டது. நோயாளிக்கு நரம்புமூலம் குளுகோஸ் மற்றும் டெரிபிலின் ஊசி மருந்துகள் செலுத்தப்பட்டன. முக்கிய முதலுதவி அளித்தபின் நோயாளியை தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டார். இ. ஸி. ஜி. எடுக்கப்பட்டது, நோயாளியின் நிலைமை 11 மணியிலிருந்து தேற ஆரம்பித்தது. மூச்சு விடுதல், நாடித் துடிப்பு, இரத்த அழுத்தம் முதலியன தேறின. ஆனால், பகல் 1 மணிக்குமேல் நோயாளிக்கு பல்மோனரி ஈடிமா (Pulmonary oedema) ஏற்பட்டது. இருதய சிகிச்சை நிபுணர் நோயாளியை பார்த்து இரத்த ஓட்டம் நின்றுவிட்டதாக அறிவித்தார். மேலே கூறப்பட்ட சிகிச்சைகளுடன் லோமோடெக்ஸ் I. V. ட்ரிப் நோயாளிக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் ஏற்கனவே, பல தடவை இந்த ஊசி போடப்பட்டுள்ளதால் இப்பெண்ணிற்கு 15-4-81 அன்று சோதனை ஊசி (Test dose) போடவில்லை என்று மருத்துவமனை கண்காணிப்பாளர் அறிவிக்கிறார். ஸ்ட்ரொப்டோமைசின் மற்றும் பெனிசிலின் ஊசிகள் (காம்பினேஷன்) போட்டதால் ஏற்பட்ட விளைவு என்றும்கூறுகிறார். இந்த இறப்பு மருத்துவர்களின் சக்திக்கும் மீறியதாகும்.

1981 மே 11] [டாக்டர் எச். வி. ஹண்டே]

இந்த செய்தியைக்கேட்டவுடன் மருந்து ஆய்வாளர் மருத்துவ மனையில் ஏனைய வார்டுகளிலிருந்து பெறப்பட்ட இம்மருந்தின் இருப்பிலிருந்து சோதனைக்காகச் சிறிது எடுத்துக் கொண்டார் என்றும், 75 வயால் (vial) ஸ்ட்ரெப்டோமைசின் 2 வயால் புரோ—பென்சைல் பெனிசிலின் இருப்பை நோயாளிக்குக் கொடுக்கக் கூடாதென்று தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டது என்று மருந்து கட்டுப்பாடு அதிகாரி அறிவிக்கிறார், இதே இருப்பிலிருந்து போடப்பட்ட ஊசியினால் மற்ற நோயாளிகளுக்கு எந்த விதமான ஊறும் ஏற்படவில்லை என்று மருந்து ஆய்வாளர் அறிவிக்கிறார். இந்த மருந்தின் தரத்தைப் பற்றிய அறிக்கை கிங் நிலையத்திலுள்ள சோதனைக் கூடத்தினின்று மருந்து கட்டுப்பாடு அதிகாரியால் எதிர்பார்க்கப்படுகிறது. மராட்டிய மாநிலத்தில் செய்யப்படும் ஸ்டிரெப்டோமைசின் ஊசி மருந்தின் தரத்தை ஆய்வு செய்யுமாறு மகாராட்டிர மாநில அரசு கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மருந்து கட்டுப்பாடு அதிகாரி தெரிவிக்கிறார். ஐ.டி.பி.எல் (I.D.P.L) நிறுவனத்திற்காக இன்டிராக் (Ir.t ac) நிறுவனம் தயாரிக்கும் புரோ—பென்சைன் பெனிசிலினை ஆய்வு செய்யுமாறு காஞ்சிபுரத்திலுள்ள முதுநிலை மருந்து ஆய்வாளர் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறார்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிறுமிக்கு 1977ஆம் ஆண்டிலிருந்து பல தடவைகள் ஸ்ட்ரெப்டோ பெனிசிலின் ஊசி போடப்பட்டுள்ளதாக இந்த விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால், 1977ஆம் ஆண்டிலிருந்து போடப்பட்ட அந்த ஊசியில் எந்தவிதமான எதிர் நடவடிக்கையும் இல்லாமல், தற்சமயம் போடப்பட்ட அந்த ஊசியால் அந்த மாணவி இறந்திருக்கிறார் என்று சொன்னால், ஸ்ட்ரெப்டோ பெனிசிலின் ஊசிக்குப் பதிலாக வேறு ஏதாவது ஊசி போடப்பட்டதா? அதனால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாமல் தடுப்பதற்கு அந்த அதிகாரி, டாக்டர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ட்ரெப்டோ பெனிசிலின் ஊசிதான் போடப்பட்டது. அதற்குப் பிறகு எந்த வயாலில் போடப்பட்டதோ, அந்த வயாலின் பேச் நம்பர் எல்லாம் எடுத்து, அந்த பேச்சிலே இருக்கக்கூடிய மருந்து, இந்த குறிப்பிட்ட வயாலில் மிகுதியாக இருந்த மருந்து, அதாவது ஒரு சொட்டு இருந்தாலும்கூட, அதை எடுத்து சோதனை செய்ததில், எந்தவிதமான கோளாறும் இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது. துரதிருஷ்டவசமாக அனபலோக்டிக் ஷாக் என்று சொல்லக்கூடிய ஷாக் ஏற்பட்டது. எவ்வளவுதான் எச்சரிக்கையாக இருந்தாலும்கூட, சிலநேரங்களில் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டு விடுகின்றது. அந்தமாதிரியான விபத்து இது என்று கருதப்படுகிறது.